**தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன அரச நிதித் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 20 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரச நிதித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் | 2.4 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5 |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை | 2.1 |
| | | 4. பெறுகை செயன்முறைகளை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாகவும் சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் | 1. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் | 2.7 |
| | | 2. கடப்பாடுகளும் பொறுப்புக்களும் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| | அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதென்பதுவும். | | |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களை தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதென்பதுவும். | இணங்காமைகள் | 2.8 |
| 128(1)(ஒ) | செலவிடப்பட்ட ஏதேனும் செலவினமொன்று அல்லது பொறுப்பொன்று கடப்பாடொன்றாக இருந்த போதிலும், தமது செலவின விடயப் பரப்பு அல்லது எல்லைகள் அல்லது ஏனைய அதிகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு ஒன்றிற்குள் வருமாறும் அது போதியளவு அதிகாரம் பெற்றுள்ளதென்பதுவும் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலுள்ள குறைபாடுகள் | 2.6 |
| | | 2. மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.9 |

## 2 பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### கடமைகள் நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் 10 பிரதான கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிராத அந்த 10 செயற்பாடுகளில் 03 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் இறுதியிலுள்ள செயன்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்காக உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன் காரணமாக 06 பொறுப்புவாய்ந்த பரப்புக்களிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்து கொள்ளுதல்/ அதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்படுதல் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 பாதீட்டு முன்மொழிவு இலக்கங்கள் 425 மற்றும் 426 இன் பிரகாரம் அனைத்து நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்களும் மீளாய்வு செய்யப்படுவதற்கும், அவற்றின் மூலம் நிதியங்கள் காணப்படுவதை நியாயப்படுத்துவதற்கும், அந் நிதியங்களிற்கு உரிய உறுப்புரைகளை தற்போதைய தேவைப்பாடுகளிற்கு பொருத்தமாக திருத்துவதற்கும் அத்துடன் நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கும் முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந் நோக்கத்திற்காக 2016 யூன் 02 இல் நியமிக்கப்பட்ட பிரதான குழு மற்றும் 08 உபகுழுக்களால் அவற்றிற்குரிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு 2017 மார்ச் 31 இல் வழங்கப்பட்டிருந்தது. இவ் அறிக்கை பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அமைச்சரவைக் குழுவிற்கு 2017 யூன் 21 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களத்திற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 210 நிதியங்களில் 105 அரசாங்க நிதியங்கள் (Public Funds) மற்றும் 105 அரசசார்பற்ற நிதியங்கள் (Non Public Funds) காணப்படுகின்றன என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 105 அரசசார்பற்ற நிதியங்களில் சிக்கன நிதியங்கள், பணிக்கொடை நிதியங்கள், நலன்புரி நிதியங்கள், உள்ளக முகாமைத்துவ நிதியங்கள், ஆராய்ச்சி நிதியங்கள் மற்றும் வைத்தியசாலை வாட் (wards) முன்னேற்றுதல் நிதியங்கள் உள்ளடங்கியிருந்தன. அந் நிதியங்கள் இம் மீளாய்வின் கீழ் கருத்தில் கொள்ளப்பட்டிருக்காததுடன் சில நிதியங்கள் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டிருக்கவில்லை என குழு அறிக்கையிட்டிருந்தது. அதற்கிணங்க இப் பாதீட்டு முன்மொழிவுகள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை முழுமையாக அடைந்து கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ii) அரசாங்க நிதியங்களை மீளாய்வு செய்தல் தொடர்பான குழுவின் பரிந்துரைகளை உள்ளடக்கி பொருளாதார அபிவிருத்தி அமைச்சரவைக் குழுவின் தலைவரிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதியங்களில் உள்ளடக்கப்பட்ட 10 நிதியங்கள் தவிர மிகுதியாகவுள்ள நிதியங்களின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| **தொடர் இலக்கம்** | **நிதியங்களின் எண்ணிக்கை** | **தேறிய சொத்துக்களின் பெறுமதிகள்** | **குழுவின் பரிந்துரைகள் சுருக்கமாக** |
|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | |
| 1 | 21 | 25,023 | நிதியங்கள் சுயமாக வருமானம் உழைப்பதால் மேலும் பேணப்படுதல். |
| 2 | 29 | 22,214 | நிதியத்தின் முகாமைத்துவத்தை மீள ஸ்தாபித்தல், முகாமைத்துவ அதிகாரத்தை மாற்றுதல் மற்றும் முறையாக நிதியத்தின் உள்ளக ஒருங்கிணைப்பை மேற்கொண்டு பேணுதல். |
| 3 | 12 | 31,185 | அனைத்து பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் வருடாந்த பாதீட்டு செயன்முறைக்கு எடுக்கப்பட்டு பாதீட்டு செயன்முறையில் உள்ளடக்கப்பட்டு மேலும் பேணப்படுதல். |
| 4 | 13 | 2,629 | அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் முடிவுறுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| 5 | 14 | 13,581 | அரசாங்க நிறுவனமொன்று சாதாரண நடைமுறை மூலம் செயற்படுத்தப்பட முடியும் என்பதனால் அரசாங்க பாதீட்டு செயன்முறையில் உள்ளடக்கப்படுதல். |
| 6 | 6 | 52,105 | அரசாங்க சேவை சேமலாப நிதியம் தவிர்ந்த மிகுதி அனைத்து நிதியங்களையும் அரசாங்க சேவை ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளடக்குதல். |
| | -------- | ----------- | |
| | 95 | 146,737 | |
| | ==== | ======= | |

(இ) இந் நோக்கத்திற்காக 2016 செப்தெம்பர் 02 இல் ரூபா 10,800,000 மேலதிக நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் செலவின விடய இலக்கம் 1405 கீழ் ரூபா 3,470,825 செலவினம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிடப்பட்ட எந்தவொரு பரிந்துரையும் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 19 வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம்/ சேவை நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றோ அல்லது குறிப்பிடப்பட்ட நிதியத்தை பேணுதல் நியாயமற்றது என்றோ குழு அபிப்பிராயத்தை கொண்டிருந்தால் 2017 ஆம் நிதியாண்டிலிருந்து வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் அந் நிதியங்கள் எடுக்கப்பட வேண்டுமென அக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அதேபோல் நிதியங்களின் உள்ளதன்மையை நியாயப்படுத்துதல் மற்றும் தற்போதைய தேவைப்பாடுகளிற்கு பொருந்தக்கூடியவாறு அந் நிதியங்கள் தொடர்பான உறுப்புரைகளை மீளாய்வு செய்தல் என்பன இன்றுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(உ) நிதிப் பிரமாணம் 153 இன் பிரகாரம் பொது கணக்குகள் குழுவின் அறிக்கையை பெற்றதன் பின்னர் அறிக்கையில் கையாளப்பட்ட வெவ்வேறு விடயங்கள் தொடர்பான திறைசேரிக் குறிப்புக்கள் நிதி அமைச்சின் அறிவுறுத்தல்கள் மீது பொதுத் திறைசேரியின் சார்பில் பொது நிதித் திணைக்களத்தால் வழங்கப்படும். மேலும் எதிர்கால நிதி நடவடிக்கைகளின் போது பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் இக் குறிப்புக்களை வாசித்தறிந்து அவற்றை வழிகாட்டியாக பயன்படுத்த வேண்டும். கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான நிதியாண்டுகளிற்காக வழங்கப்பட்ட பொதுக் கணக்குகள் குழுவின் பராளுமன்ற வெளியீடுகளின் 240-2013 ஆம் இலக்க முதலாவது அறிக்கை மற்றும் 356-2015 ஆம் இலக்க இரண்டாவது அறிக்கை மீதான திறைசேரிக் குறிப்புக்கள் 2015 திசெம்பர் 02 இல் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பொதுக் கணக்குகள் குழுவின் தகவல்களின் பிரகாரம் இடைக்கால அறிக்கை ஒன்றினை உள்ளடக்கிய 05 அறிக்கைகள் பின்னர் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அவ் அறிக்கைகளை வாசித்தறிந்து அவற்றை வழிகாட்டியாக பயன்படுத்தும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 1993 ஆம் அண்டு தொடக்கம் தற்போது வரையான ஏறத்தாழ 25 ஆண்டு காலப்பகுதியின் போது அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் எனும் பெயர்களிலான பொதுத் துறையிலுள்ள அனைத்து நிறுவனங்களாலும் அரச நிதியின் முகாமைத்துவம் 1992 இன் நிதிப் பிரமாணங்கள் மற்றும் தற்போதுள்ள பிரமாணங்களில் காலத்திற்குக் காலம் குறைபாடுகளை பூர்த்தி செய்வதன் மூலம் பொதுத் திறைசேரியால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்கள்

மற்றும் சுற்றறிக்கைகள் என்பற்றிற்கிணங்க மேற்கொள்ளப்படுகின்றது. 1992 தொடக்கம் இன்றுவரை குறித்த சில நிதிப் பிரமாணங்கள் பல தடவைகள் திருத்தப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் நடுத்தர வருமானத்தையுடைய நாட்டிற்கு பொருத்தமானதாக நிதிப் பிரமாணங்களை மீளாய்வு செய்யும் தேவைப்பாடு மேலும் வலியுறுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தை திருத்தம் செய்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் தேவைப்பட்டால் குறிப்பிடப்பட்ட அதிகாரச்சட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு உதவியை வழங்குவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அந் நோக்கங்கள் தற்போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேற்படி சட்டமூலம் தொடர்பான 2018 மே 31 ஆம் திகதிய எம்எவ்/பிஎவ்/03/சீஎம்/2018/92 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அதற்குரிய அமைச்சரவைக் கூட்டத்தின் 2018 மே 31 ஆம் திகதிய 18/1187/809/035 ஆம் இலக்க அறிக்கையின் பிரகாரம் அரச நிதி முகாமைத்துவத்தில் அறிவு மற்றும் அனுபவத்தையுடைய நிபுணர் தொகுதி/ குழு ஒன்றை நியமனம் செய்து அதற்குரிய பரிந்துரைகளை 03 கிழமைகளிற்குள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 யூன் 22 இல் அதற்குரிய குழு நியமிக்கப்பட்டமை தவிர இது தொடர்பில் வேறு ஏதாவது செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிப் பிரமாணம் 340 இன் பிரகாரம் அனைத்து அரசாங்க திணைக்களங்களினதும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் போது போதியளவில் அரசாங்க அச்சகத்திலிருந்து அடியிதழ்சேர் புத்தக இருப்புக்களை அரச நிதித் திணைக்களம் பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களம் இடவசதி போதாமை போன்ற காரணங்களினால் போதியளவு அடியிதழ்சேர் புத்தகங்களை திணைக்களம் பெற்றிருக்கவில்லை. மேலும் நிதிப் பிரமாணங்கள் 316 மற்றும் 317 இன் பிரகாரம் அடியிதழ்சேர் புத்தகங்கள் அந் நோக்கத்திற்காக விசேடமாக வழங்கப்பட்ட பெட்டகம், காப்பகம், வலுவான பெட்டி, வலுவான அறை அல்லது ஏனைய பாதுகாப்பான இடத்தில் பாதுகாப்பாக எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களம் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறே அடியிதழ்சேர் புத்தகங்களினை வழங்குதல் மற்றும் பதிவு செய்தல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும் 796501 - 796600 (23டபிள்யூ) ஐ கொண்ட பற்றுச்சீட்டுப் புத்தகம் அச்சகத்தால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளிலும் அத்தகைய காணாமல் போன தன்மை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப் பிரமாணம் 343 இன் பிரகாரம் அவ்வாறு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.2 பெறுகைச் செயன்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

திணைக்களத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் பெறப்பட வேண்டியிருந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளிற்காக ரூபா 18.35 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 0.91 மில்லியன் நிதியேற்பாடுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. இதனால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 17.44 மில்லியன் தொகை அல்லது 95.04 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பின்வரும் விடயங்கள் காரணமாக பாதீட்டுடன் சமப்பட்டிருக்கவில்லை.

(i) மூலதன செலவின விடயம் ஒன்றின் கீழ் ரூபா 400,000 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்குரிய கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அதன் நிதியேற்பாடு முழுவதும் 2017 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரு மூலதன செலவின விடயத்தியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 300,000 தொகையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுகள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ் செலவின விடயத்தின் கீழ் 2017 திசெம்பர் 31 வரையிலும் செலவினம் ஏற்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்காட்டப்பட்டவாறு செலவின விடயம் 2102 இன் கீழ் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,000,000 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 14,000,000 மேலதிக நிதியேற்பாடுகள் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக நிதியேற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் திருத்தம் செய்யப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 17,000,000 மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 16,869,475 தொகை அல்லது 99 சதவீத தொகை பயன்படுத்தப்படாமல் ஆண்டின் இறுதி வரை சேமிக்கப்பட்டிருந்தது. இதனால் வழங்கப்பட்ட தொகையை செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மேலதிக நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்வதிலுள்ள நடைமுறைச்சாத்தியம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் காகிதாதிக் கொள்வனவு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் ஒரே பொருட்கள் உயர்வான விலைகளில் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தன.

(இ) பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய காகிதாதி/ அலுவலக தேவைப்பாடுகளின் அளவு தீர்மானிக்கப்பட்டிருக்காததால் கூறுவிலைகள் கோரப்படாமல் அவசர தேவைப்பாடுகளாக கருதப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) திணைக்களத்தால் 2017 பெப்ரவரி 20 தொடக்கம் 23 வரை திணைக்களத்தால் IV ஆவது தென் ஆசிய பெறுகை மாநாடு இலங்கையில் நடைபெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 3,484,411 செலவினம் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ் மாநாடு தொடர்பான செலவினம் மற்றும் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 2016 ஒக்தோபர் வரையிலும் இவ் மாநாட்டை நடாத்துவது தொடர்பாக திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 23 இல் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தம் செய்யப்பட்ட பெறுகைத் திட்டத்திலும் உரிய தகவல்களை உள்ளடக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிடப்பட்டவாறு இதற்காக ரூபா 3,484,411 மொத்தக் கிரயம் ஏற்பட்டிருந்த போதிலும் ஆரம்பத்தில் இவ் மொத்தக் கிரயத்தை இனங்கண்டு அதற்கிணங்க முறையான பெறுகைச் செயன்முறையை திணைக்களம் அடைந்திருக்கவில்லை.

**2.3 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 73,251,882 கூட்டுமொத்தப் பெறுமதியான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 94(i) மற்றும் 2014 சனவரி 01 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.4 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கடப்பாடொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய செலவின விடயக் குறியீட்டின் கீழ் போதுமானளவு பாதீட்டு நிதியேற்பாடுகள் காணப்படுகின்றதென உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு உறுதிப்படுத்தப்படாது ரூபா 73,937,746 கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**2.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் முறைாக செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக திணைக்களத்தால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 138.23 | 137.88 | 0.35 | 0.25 |
| | மூலதனம் | 2.52 | 2.00 | 0.52 | 21 |
| | மொத்தம் | **140.75** | **139.88** | **0.87** | |
| 2014 | மீண்டெழுபவை | 188.25 | 188.18 | 0.07 | 0.04 |
| | மூலதனம் | 2.30 | 2.10 | 0.2 | 8.69 |
| | மொத்தம் | **190.55** | **190.28** | **0.27** | **0.14** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 | மீண்டெழுபவை | 194.60 | 192.43 | 2.17 | 1 |
| | மூலதனம் | 2.30 | 1.73 | 0.57 | 25 |
| | மொத்தம் | **196.90** | **194.16** | **2.74** | **1** |
| 2016 | மீண்டெழுபவை | 66.78 | 59.16 | 7.62 | 11 |
| | மூலதனம் | 10.49 | 5.95 | 4.54 | 43 |
| | மொத்தம் | **77.27** | **65.11** | **12.16** | **16** |
| 2017 | மீண்டெழுபவை | 521.43 | 520.57 | 0.87 | 0.16 |
| | மூலதனம் | 53.25 | 10.27 | 42.98 | 81 |
| | மொத்தம் | **574.68** | **530.84** | **43.85** | **8** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக 03 செலவின விடயங்களிற்காக ரூபா 7,000,000 நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் 150 சதவீதம் தொடக்கம் 1550 சதவீதம் வரையான சதவீதத்தினுள் மேலதிக நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அச் செலவின் விடயங்களின் சேமிப்புக்கள் முறையே 15, 99 மற்றும் 77 சதவீதங்களாக காணப்பட்டன.

(ஆ) நிதிப் பிரமாணம் 75 இன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீட்டின் தேறிய தொகை கணிப்பிடப்பட வேண்டியது தேவையான மேலதிக நிதி ஏற்பாட்டுத் தொகையிலிருந்து வகைமாற்றத்திற்காக கிடைக்கக்கூடிய சேமிப்புக்களை கழித்த மீதியொன்றாக உள்ள போதிலும் இரண்டு மேலதிக நிதியேற்பாடுகளிற்காக பெறப்பட்ட ரூபா 45,000,000 கூட்டுமொத்தமான குறைநிரப்பு மதிப்பீடுகளில் ரூபா 42,276,750 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இவை மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் 77 சதவீதம் மற்றும் 99 சதவீதமான சேமிப்பாகக் காணப்பட்டன.

(இ) ரூபா 2,500,000 வருடாந்த நிதியேற்பாடுகளுடன் செலவின விடயமொன்றிற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நிதிப் பிரமாணம் 66 வகைமாற்றங்கள் ஆகிய 02 சந்தர்ப்பங்களின் கீழ் 57 சதவீதத்தினுள் நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அச் செலவின விடயத்தின் நிதியேற்பாடுகளில் சேமிப்புக்கள் 90 சதவீதமாகும்.

(ஈ) ரூபா 23,450,000 கூட்டுமொத்தமான வருடாந்த நிதியேற்பாடுகளிற்குரிய 05 செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளில் நிதிப் பிரமாணம் 66-69 நிதியேற்பாடுகளின் கீழ் 09 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரை குறைப்புக்களும் ரூபா 34,500,000 கூட்டுமொத்தமான வருடாந்த நிதியேற்பாடுகளிற்குரிய 08 செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளில் 09 சதவீதம் தொடக்கம் 57 சதவீதம் வரை அதிகரிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) ரூபா 56,398,200 கூட்டுமொத்தமான தேறிய நிதியேற்பாடுகளுடன் 06 செலவின விடயங்களின் சேமிப்புக்கள் ரூபா 43,739,569 கூட்டுமொத்தமாக காணப்பட்டது. இதனால் தேறிய நிதி ஏற்பாடுகளில் 4 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அவை காணப்பட்டன.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

திணைக்களத்திற்குரிய 24501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.0 | 4.2 | 1.8 | 2.8 | 18.0 | 10.7 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் செலவினத்தின் ஆகக் கூடிய எல்லை ரூபா 4 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும் உள்ளபடியான பெறுமதி ரூபா 4.2 மில்லியன் தொகையாகும். இதனால் ரூபா 0.2 மில்லியன் எல்லையை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இது தொடர்பான விசாரணையின் போது இக் கணக்கின் 245012 இற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக 245011 இற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 0.4 மில்லியன் தொகை காரணமாக எல்லைகள் விஞ்சியிருந்ததுடன் 2018 பெப்ரவரி 07 ஆம் திகதிய மாற்றீட்டுப் பத்திரத்தின் மூலம் இது திருத்தம் செய்யப்பட்டிருந்தது என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இதன் விளைவாக ஆண்டின் போது திணைக்களப் புத்தகங்களிற்கும் திறைசேரிக் கணனி அச்சீட்டுத் தாளிற்கும் இடையே வரவுகள் மற்றும் செலவுகளில் ரூபா 0.4 மில்லியன் வேறுபாடுகள் காணப்பட்டன.

## 2.7 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிகள் மற்றும் பெறப்பட்ட கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பித்த கட்டுநிதிகளுக்கு இடையிலான வேறுபாடு | விண்ணப்பித்த கட்டநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 5.80 | 5.70 | 5.30 | (0.09) | (0.40) |
| பெப்ரவரி | 5.80 | 6.71 | 9.33 | 0.92 | 2.62 |
| மார்ச் | 5.80 | 5.60 | 4.70 | (0.20) | (0.90) |
| ஏப்ரல் | 5.80 | 6.09 | 5.50 | 0.29 | (0.59) |
| மே | 5.80 | 5.95 | 4.87 | 0.16 | (1.08) |
| யூன் | 5.80 | 5.93 | 4.50 | 0.14 | (1.43) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 5.80 | 5.75 | 4.61 | (0.04) | (1.14) |
| ஆகஸ்ட் | 5.80 | 11.50 | 10.37 | 5.71 | (1.13) |
| செப்தெம்பர் | 5.79 | 7.42 | 5.94 | 1.62 | (1.48) |
| ஒக்தோபர் | 5.79 | 7.10 | 5.26 | 1.31 | (1.84) |
| நவம்பர் | 5.79 | 13.20 | 4.96 | 7.41 | (8.24) |
| திசெம்பர் | 5.82 | 15.00 | 6.70 | 9.19 | (8.30) |
| **மொத்தம்** | 69.59 | 95.95 | 72.04 | 26.42 | (23.91) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தால் மேற்குறிப்பிடப்பட்டவாறு திட்டமிடப்பட்ட பின்னர் விண்ணப்பிக்கப்பட வேண்டிய கட்டுநிதிகளாக ஒரே தொகைகள் காட்டப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு மாதத்திலும் திணைக்களம் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தொகைகளை விண்ணப்பித்திருந்தது.

(ஆ) ''2017 ஆம் ஆண்டிற்கான உப கட்டுநிதி எல்லையை தீர்மானித்தல்'' என்ற தலைப்பின் கீழ் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2017 சனவரி 09 ஆம் திகதிய ரீஓ/பீஈ1/2/ஐஎம்பி/245/2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உப கட்டுநிதியின் மாதாந்த எல்லைகளை மீளாய்வு செய்வதன் மூலம் உப கட்டுநிதி எல்லைகளை தீர்மானிப்பதற்கும் சரியான தகவல்களை அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்கிணங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.5 ஆம் பந்தி | - | ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட திருத்தம் செய்யப்பட முடியாத பொருட்கள் (டி), திருத்தம் செய்யப்பட வேண்டிய பொருட்கள் (ஆர்), விற்பனை செய்யக்கூடிய பொருட்கள் (எஸ்) மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு கையளிக்கப்படக்கூடிய பொருட்கள் தொடர்பானவை (ரீ) தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 மே 01 வரையிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப் பிரமாணம் 756 (4)

அலுவலக அறைகளை நவீனமயப்படுத்துவதற்குப் பொருத்தமான புதிய மரத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு திணைக்களம் தீர்மானித்திருந்ததுடன் குறிப்பிடப்பட்ட மரத் தளபாடம் மீதான மெய்மையாய்வை மேற்கொண்ட பின்னர் திணைக்களத்தால் உரிமையாக்கப்பட்ட பழைய மரத் தளபாடத்தை அகற்றுவதற்காக 2018 சனவரி 09 இல் குழு ஒன்றினூடாக பொருட்களை அகற்றுதல் தொடர்பான அறிக்கை பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் மரத் தளபாடப் பொருட்கள் குறிப்பிடப்பட்ட மெய்மையாய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் மேலதிகமாக நியமனம் செய்யப்பட்ட மெய்மையாய்வுக் குழுவின் பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.9.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி ஊதியங்களுக்கான செலவினம்

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 44.52 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வருடாந்தம் தனிநபர் ஒருவரிற்கான செலவினம் ரூபா 654,683 ஆக இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 29 | 20 | 09 |
| மூன்றாம் மட்டம் | 02 | 02 | 00 |
| இரண்டாம் மட்டம் | 33 | 31 | 02 |
| ஆரம்ப மட்டம் | 17 | 15 | 02 |
| **மொத்தம்** | **81** | **68** | **13** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 81 பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டதனால் இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 16 சதவீதமாக காணப்பட்டதுடன் இவ் வெற்றிடங்களினுள்ளே சிரேஷ்ட நிலையில் 09 பதவிகள் காணப்பட்டன.

(ஆ) 2017 திசெம்பர் 31 வரையிலும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி அதே போல் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் 02 பதவிகள் பதிற்கடமை நியமனங்கள் மூலம் நிரப்பப்பட்டிருந்ததுடன் மிகுதியாகவுள்ள பணிப்பாளர் நாயகத்தின் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

(இ) அதற்கிணங்க, அரச துறையிலுள்ள பொதுக் கணக்களிதன்மைக்கு உதவிபுரிகின்ற நிறுவன ரீதியான தொழிற்பாடொன்றுடன் நல்லாளுகையின் பரந்துள்ள பின்னணியை வலுப்படுத்துவதற்காக அரச நிதி முறைமைகள் மற்றும் நடைமுறைகளை தயாரித்தல், மீளாய்வு செய்தல், அபிவிருத்தி செய்தல், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நாளதுவரையாக்குதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற திணைக்களத்தின் உயர் முகாமைத்துவ மட்டத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் 03 பதவிகளில் 01 பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து பதிற்கடமை அடிப்படையில் காணப்பட்டதுடன் ஏனைய பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. இப் பதவிகளை அத்தியாவசிய அடிப்படையில் நிரப்புவதற்கு திணைக்களம் இன்று வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 மே 03 தொடக்கம் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் நியமனத்திற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்ட 2017 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய ரமுபா 02/125 ஆம் இலக்கக் கடிதத்திற்கான பதிலில் அனுப்பப்பட்ட நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரின் 2018 பெப்ரவரி 16 ஆம் திகதிய எம்எவ்1/03/டி/டிபிஎவ் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அந் நியமனத்திற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு எதிராக தீர்மானிக்கப்பட்டிருந்தது என திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் 2013 மே 02 தொடக்கம் 2018 மார்ச் 25 வரை கடமைகளை நிறைவேற்றுவதற்கு குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் நியமனம் செய்யப்படுதல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததென நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரின் 2018 ஏப்ரல் 05 ஆம் திகதிய எம்எவ்1/01/26/12/டிபிஎவ் ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2018 மார்ச் 17 ஆம் திகதிய பிஎவ்டி/ஏடிஎம்/07/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இவ் உத்தியோகத்தரிற்கு பதிற்கடமை சம்பளம் செலுத்தப்பட்டிருக்காததுடன் முழு நேரக் கடமையில் ஈடுபடுகின்றதற்காக நிரந்த நியமனத்திற்கு உரித்தான தொகைகளை விஞ்சி தொடர்பாடல் மற்றும் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன